PRGI (RNI) No: TNTAM/2023/88599

திரை மொழி
THIRAI MOZHI

TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

திரை: 03	மொழி : 10	மே - 2026	பக்கம்: 8	விலை: ரூ.10
Volume : 03	Issue : 10	May - 2026	Page: 8	Price: Rs. 10



கோடம்பாக்கத்திலிருந்து கோட்டைக்குச் சென்ற மக்களின் நாயகன்!

புதிய யுகத்தின் தொடக்கம்

*1984*ஆம் ஆண்டு, தனது தந்தை எஸ்.ஏ. சந்திரசேகர் இயக்கத்தில் வெளிவந்த 'வெற்றி' திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாகத் தனது திரைப் பயணத்தை தொடங்கிய திரு. சி. ஜோசப் விஜய், *18* வயதில் 'நாளைய தீர்ப்பு' *(1992)* வழியாக கதாநாயகனாக அரங் கேறினார். ஆரம்பகால போராட்டங் களுக்குப் பிறகு, 'பூவே உனக்காக', 'காதலுக்கு மரியாதை', 'லவ் டுடே' 'துள்ளாத மனமும் துள்ளும்' ஆகிய படங்கள் அவரை குடும்பப் பார்வையாளர்களுக்கு நெருக்கமாக்கின. தொடர்ந்து 'கில்லி', 'போக்கிரி' 'திருப்பாச்சி' 'சிவகாசி' வழியாக மாஸ் ஹீரோவாக உருமாறிய அவர், 'துப்பாக்கி', 'கத்தி', 'மெர்சல்', 'சர்க்கார்' 'மாஸ்டர்', 'லியோ' என ஒவ்வொரு படத்திலும் தன்னையே முறியடித்து, தென்னிந்திய திரையுலகின் அசைக்க முடியாத 'தளபதி'யாக உயர்ந்தார்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக வெள்ளித்திரையில் அவர் விதைத்த அன்பின் அறுவடையாக, இன்று அவர் தமிழக வெற்றிக் கழகத்தின் *(TVK)* தலைவராகவும், தமிழ்நாட்டின் *13*வது முதலமைச்சராகவும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளார் — இது காலத்தின் மகத்தான சரித்திரம்.

திரையுலகின் ஒருங்கிணைந்த கொண்டாட்டம்


தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள விஜய் அவர்களுக்கு, இந்தியத் திரையுலகைச் சேர்ந்த பல்வேறு முன்னணி கலைஞர்கள் மற்றும் பிரபலங்கள் தங்களது மனமார்ந்த வாழ்த்துகளையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்த வண்ணம் உள்ளனர்.

பக்கம் 7ல் தொடரும்



R.B.சௌத்ரி : இளம் இயக்குநர்களின் கலங்கரை விளக்கம்

இயக்குநர் பிருந்தா சாரதி



தமிழ் சினிமாவில் எத்தனையோ சாதனையாளர்கள் முத்திரை பதித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆனால் தயாரிப்பாளர்களில் ஆர்.பி. சௌத்ரி அவர்களின் சாதனை வேறொருவர் செய்யாதது.

அவரது சூப்பர் குட் பிலிம்ஸ் நிறுவனம் இதுவரை 40க்கும் மேற்பட்ட புதிய இயக்குநர்களை அறிமுகம் செய்துள்ளது. புதிய இயக்குநர்களை நம்பி கோடிகளில் முதலீடு செய்வது பெரிய ரிஸ்க் என்று பெரும்பாலானோர் ஒதுங்கி இருந்த காலகட்டத்தில் புதியவர்களிடம் இருக்கும் புதிய சிந்தனைகள் தான் மக்களைத் திரையரங்கிற்கு இழுத்து வரும் என்று உணர்ந்து புதிய புதிய இயக்குநர்களிடம் கதை கேட்டுப் படம் எடுத்தவர் ஆர்.பி. சௌத்ரி.

பெயர் சொன்னால் போதும் தரம் விளங்கும் என்று ஒரு விளம்பர வாசகம் உண்டு. அப்படி சுவரொட்டிகளில் சூப்பர் குட் பிலிம்ஸ் 'ஆர். பி. சௌத்ரி வழங்கும்...' என்ற வாசகங்கள் இருந்தாலே திரைப்படத்திற்கு குடும்பத்தோடு போகலாம் என்ற ஒரு மனநிலையை தமிழகத்தில் உருவாக்கி யிருந்தார்.


இப்போது கூட தயாரிப்பாளர் களிடம் ஒரு எழுத்தாளர் அல்லது இயக்குநர் கதை சொல்கிறேன் என்றால் அதை தவிர்ப்பார்கள் அல்லது தள்ளிப் போடுவார்கள். ஆனால் யாரிடம் என்ன இருக்கிறதோ... நாம் அதை மிஸ் பண்ணி விடக்கூடாது என்று ஆர்வத்து டன் கதை கேட்கும் இயல்புடையவர் ஆர். பி. சௌத்ரி அவர்கள்.

அப்படித்தான் புதுவசந்தம் கிடைத்தது. அப்படித்தான் ஆனந்தம், லவ் டுடே, துள்ளாத மனமும் துள்ளும், திருப்பாச்சி போன்ற எண்ணற்ற படங்கள் கிடைத்தன.

இயக்குநர்களை மட்டுமல்ல... பல தொழில் நுட்பக் கலைஞர்களைப் புதிதாகவே தைரியமாக பலமுறை களம் இறக்கியவர். எஸ்.ஏ. ராஜ்குமார், இசைக்கவிஞர் சௌவுந்தர்யன், சிற்பி, ஆகியோர்களை இசை அமைப்பாளர் களாக ஆக்கினார். இதே போல் ஒளிப்பதிவாளர்கள், படத்தொகுப் பாளர்கள், கலை இயக்குநர்கள். பாடலாசிரியர்கள் என்று பலரை அறிமுகப்படுத்தி இருக்கிறார்.

அதில் ஒரு விதத்தில் அவரது தயாரிப்புச் செலவு குறைந்தது. ஆனால் அதற்குச் சமமாக அவருக்கு ரிஸ்க் இருந்தது. அது பெரும்பாலும் அவருக்கு வெற்றியை அளித்தது.

ஆனந்தம் திரைப்படத்திற்காக லிங்குசாமி கதை எழுதிய புத்தகத்தை அவருக்கு படிக்க கொடுத்தார். அதை ஒரு விமான பயணத்தில் படித்துவிட்டு தைரியமாக மம்முட்டி, முரளி, அப்பாஸ், தேவயானி, ரம்பா, சினேகா முதலிய நடிகர்களை ஒப்பந்தம் செய்து மிகப் பெரும் முதலீட்டில் அப்படத்தை எடுத்தார். ஒரு புதுமுக இயக்குநரை நம்பி இவ்வளவு பெரிய நட்சத்திர பட்டாளத்தை வைத்து எடுக்கும் தைரியம் அவருக்கு மட்டுமே



இருந்தது. அந்தப் படத்திற்கு நான் அறிமுக வசனகர்த்தா. படம் மாபெரும் வெற்றி பெற்றது. என்னுடைய வசனங்கள் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது அதனால்

ஆனந்தத்துக்கு அடுத்து எனக்கு சூப்பர் குட் ஃபிலிம்ஸில் படம் இயக்கும் வாய்ப்பை அளித்தார். 'மழைக்காலம்' என்ற கதையை அவருக்காகக் கூறினேன். இரண்டு கதாநாயகர்களை அந்தப் படத்தில் அப்போது இணைக்க முடியவில்லை. படம் தள்ளிக் கொண்டே போனது. உடனே அவரது மகன் ஜீவாவை வைத்து 'தித்திக்குதே' திரைப்படம் இயக்கும் வாய்ப்பை அளித்தார்.

ஒரு முறை அவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு இயக்குநர் எப்படி தேர்ந்தெடுப்பீர்கள் என்று கேட்டேன். அவர் கதை சொல்லும் போதே அவர் கதாசிரியரா, இயக்குநரா என்பது தெரிந்து விடும் என்று கூறினார். கதை அழுத்தமாகவும் ஓரளவிற்கு அதை காட்சியாக விவரிக்கும் திறமையும் இருந்தால் நல்ல ஒளிப் பதிவாளரையும் நல்ல இணை இயக்குநரையும் கொடுத்து அவரை இயக்குநராகி விடுவார். அப்படி அவரால் இயக்குநர் ஆனவர்கள் ஏராளமானவர்கள் உண்டு. அப்படி விக்ரமன், கே.எஸ். ரவிக்குமார், பாலசேகரன், எழில், லிங்குசாமி, பேரரசு, சசி, ராஜகுமாரன், ரவிமரியா என்று புகழ்பெற்ற பல இயக்குநர்கள் அவரால் உருவானவர்களே.

"எப்படி உங்களால் இப்படி வரிசையாக வெற்றிப்படம் வழங்க முடிகிறது?" என்று கேட்டபோது ஒரளவிற்கு நாம் மக்களின் ரசனையோடு ஒத்துப் போகிறோம். 75% வெற்றி பெறுகிறது. நாம் ஒன்றும் கடவுள் அல்ல... 75% பெரிய விஷயம். தான்,"என்றார்.

தமிழ் மட்டுமல்ல தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகளிலும் படம் எடுத்து வெற்றி பெற்றவர்.

பேராசைப்படாத ஒரு தயாரிப் பாளர் என்று அவரைக் கூற வேண்டும். ஒரு படம் எடுத்துக் கொண்டிருக்கும் போதே அதனுடைய 75% வியாபாரத்தை முடித்து விடுவார். பெரும்பாலும் படம் சில்வர் ஜூப்ளி, 200 நாள் என்று வெற்றிப் படமாகவே இருக்கும். அதைக் கையில் வைத்திருந்து முழு லாபத்தையும் தானே பெறவேண்டும் என்ற அவர் நினைத்ததில்லை. "நாம் சம்பாதிக்கும்





போது பிறர் சம்பாதிப்பதை பார்த்து மகிழ வேண்டும்... அதையும் நாமே எடுத்துக் கொள்ளலாம் என்றால் மொத்தமாக போய்விடும்," என்று கூறுவார். நாட்டாமை, சூரியவம்சம், புதுவசந்தம், லவ் டுடே, துள்ளாத மனமும் துள்ளும் போன்ற பல வெற்றி காவியங்கள் அவரது சூப்பர் குட் பிலிம்ஸ் இன்சார்பாக தயாரிக்கப்பட்டு வெற்றி பெற்றன. உடனே அவற்றைத் தெலுங்கு இந்தி மொழிகளில் ரீமேக் செய்வதற்கு ஆட்கள் வந்து குவிவார்கள். அந்த மொழிகளிலும் படம் வெற்றி அடையும். நாட்டாமை, துள்ளாத மனமும் துள்ளும், ஆனந்தம், லவ் டுடே, திருப்பாச்சி போன்ற பல படங்கள் தெலுங்கில் தமிழைவிட அதிகமான வெற்றி பெற்றன.

ஒரு தயாரிப்பாளர் என்ற எல்லையில் தாண்டி அன்பும் பண்பும் மிக்க ஒரு மனிதாபிமானி என்று அவரை கூறலாம். கொரோனா காலகட்டத்தில் ஒரு நாள் சௌத்ரி சாரிடம் இருந்து எனக்கு போன் வந்தது. "எப்படி இருக்க ..."என்று கேட்டார் "நல்லா இருக்கேன் சார்... " என்றேன். "ஏதாவது உதவி வேணும்னா போன் பண்ணு... அனுப்புறேன்," என்று கூறினார். "ஒண்ணும் பிரச்சனை இல்ல சார்... என்று கூறினேன். "எதுவா இருந்தாலும் போன் பண்ணு ,"என்று கூறிவிட்டு என்ன படம் பார்த்தாய் என்று விசாரிக்கத் தொடங்கினார். எப்போது போன் செய்தாலும் சமீபத்தில் பார்த்த படம் என்ன அதனுடைய கதை என்ன அது எப்படி ஓடியது தியேட்டரில் பார்த்தாயா என்று கேட்கும் அவருடைய குணம் கடைசி வரை மாறவே இல்லை.

கடைசியாக அவரை சந்தித்தபோது என்ன படம் பார்த்தாய் என்று கேட்டார் "ப்ராஜெக்ட் மேரி ஹெய்ல் என்ற படம் பார்த்தேன் சார்," என்றேன்.

"என்ன மாதிரி கதை அது? "ஒரு சயின்ஸ் செக்ஷன் சார் "



"அப்படியா சொல்லு கேட்போம் அந்த கதையை... " கூறினேன் மிகவும் ரசித்தார்.

சௌத்ரி சார் என்றால் அவர் கதை பைண்டு ஸ்கிரிப்ட் படித்துக் கொண்டிருக்கும் காட்சியோ , யாரோ ஒரு புதிய உதவி இயக்குநரிடம் கதை கேட்டுக் கொண்டிருக்கும் காட்சியோதான் என் கண் முன்னால் எழும்.

அண்மையில் இயக்குநர் லிங்குசாமி அவரை சந்தித்தபோது பிருந்தா சாரதி கதையைத்தான்யா படிச்சுகிட்டு இருக்கேன் என்று நான் கொடுத்துவிட்டு வந்த பைண்ட் ஸ்கிரிப்ட்டை காட்டியிருக்கிறார். "நல்லா இருக்குயா அடுத்த செய்யப் போறோம்," என்று கூறினார்.



ஜீவாவிடமும் இந்த கதை எனக்கு பிடித்திருக்கிறது... உனக்கு பிடிச்சுருக்கா கேளு," என்று கூறினார். எந்த நடிகரையும் வற்புறுத்தி அவர் தேதி வாங்கவில்லை. அதுவே தான் அவருடைய மகனிடமும். எஸ்.ஏ. ராஜ்குமார் சௌத்ரி அவர்களின் பல படங்களுக்கு இசையமைத்தார். இசை கோர்ப்புக்கு அவர் வருவதும் அன்று இசையமைத்த பாடல்களை கேட்பதும் ஒரு மன்னர் தர்பாரில் இசை கேட்பதைப் போலிருக்கும். அவர் ஓ.கே. செய்தால் அந்த டியூன் நிச்சயமாக மாபெரும் வெற்றி பெறும். நாங்கள் 'ஆனந்தம்' படத்திற்காக கம்போசிங் இருந்தபோது அவர் கலந்து கொண்ட கொஞ்ச நாட்கள் மனதில் அப்படியே நினைவில் இருக்கின்றன.

அதேபோல் ஒரு இயக்குநரை நம்பி விட்டால் அதற்குப் பிறகு அவருக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்பார். படப்பிடிப்பில் நடிகர் ஒளிப்பதிவாளர் யாரோ ஒருவர் இயக்குநருக்கு முரண்பட்டால் அவர்களை சமாதானப்படுத்தி இயக்குநர்களோடு ஒத்துப் போகும்படி கூறிவிட்டு இயக்குநரை அழைத்து என்ன பிரச்சனை என்று இரவு விசாரித்து அந்த பிரச்சனையை சரி செய்வார்.

சிறிய முதலீட்டு படங்களில் இவ்வளவு பெரிய வெற்றி பெற்ற ஒரு தயாரிப்பாளர் அதுவும் தொடர்ச்சியாக வெற்றி பெற்ற ஒரு தயாரிப்பாளர் ஆர் பி சௌத்ரி அளவுக்கு இன்னொரு வர் இதுவரை இல்லை.

அவருடைய பாணியை



பின்பற்றினால் வெற்றி நிச்சயம். சாலை விபத்தில் அவர் பலியானது ஒரு சாதாரண இழப்பல்ல... தமிழ் சினிமாவின் பேரிழப்பு என்றுதான் கூற வேண்டும். அப்படி ஒரு தயாரிப்பாளரை காலம் மீண்டும் உருவாக்குவதற்கு இன்னும் எத்தனை காலம் ஆகுமோ தெரியவில்லை.

திரைமொழி சமூகநல அறக்கட்டளை
THIRAIMOZHI SOCIAL WELFARE TRUST
REG : 274/2025 E-mail : thiraimozhiswt@gmail.com
No. 41/14, F3 Loganathan Nagar, 2nd Street, Choolaimedu, Chennai -600 094.

அனைவருக்கும் அடிப்படை எளிய முறை உடற்பயிற்சி, மூச்சுப் பயிற்சி மற்றும் காயகல்ப பயிற்சிகள்

ஆரோக்கிய விழிப்புணர்வு மருத்துவ முகாம்
மகளிர் நலன் மற்றும் பொருளாதார மேம்பாடு

- குழந்தைகள் மனவள மேம்பாடு
- கல்வி வளர்ச்சி
- இளைஞர் நலன்
- கிராமிய மேம்பாடு
- பண்பாட்டு நலன்
- சூழியல் விழிப்புணர்வு

SCAN TO PAY

போன்ற உயரிய நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது தான் திரைமொழி சமூக நல அறக்கட்டளை எங்களின் இந்த சமூக பயணத்தில், தாங்களும் இணைந்து, தங்களால் இயன்ற நிதி பங்களிப்பை வழங்கிட அன்போடு வேண்டுகிறோம்.

NAME - THIRAIMOZHI SOCIAL WELFARE TRUST
BANK - STATE BANK OF INDIA, VADAPALANI BRANCH, CHENNAI.
ACCOUNT NUMBER - 45066889849 (CURRENT A/C)
IFSC CODE - SBIN0010675
BRANCH CODE : 10675

Money Send Via :- Gpay, Phonepay, Any UPI App, Mobile Banking Internet Banking, IMPS, NEFT, RTGS, Bank Transfer Also, மூலம் தங்களின் பங்களிப்பை வழங்கினால் அந்த screenshot எடுத்து தங்களின் முகவரியோடு, எங்களது 9566153766 என்ற தொலைபேசி whatsapp எண்ணுக்கோ அல்லது thiraimozhiswt@gmail.com என்ற ஈமெயிலுக்கு அனுப்பி வைக்கவும். இது தங்களின் பங்களிப்பை உறுதி செய்து ரசீது தர உதவும்.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

நாமக்கல் சிவகுரு ஜோதிடர் அருள்நிதி
ஒருங்கிணைப்பாளர் WCSC-VSP Dr. K.குரு அரங்கதுரை




தொடர்புக்கு : 94432 41309
rangadurai73@gmail.com

சிட்டிசன்: கால் நூற்றாண்டு கால திரைக் காவியம்!



இயக்குநர் ஷரவணன் சுப்பையா



2001ம் ஆண்டு ஜூன் 9ம் தேதி. அப்போது எனக்கு 14 வயது. பெங்களூரு சதாசிவ நகரில் உள்ள 'சாம்ராட்' ஹோட்டலில் தங்கியிருந்தேன். தந்தையின் அலுவல் காரணமாக அவருடன் சென்றிருந்த அந்த காலை வேளை இன்றும் பசுமையாக நினைவிருக்கிறது. காலை 7:30 மணி இருக்கும், தொலைக்காட்சியில் திருபாய் அம்பானியின் உடல்நிலை குறித்த செய்திகள் ஓடிக்கொண்டிருக்க, வெளியே சதாசிவ நகர் மெயின் ரோட்டில் ஏகப்பட்ட கூச்சலும் ஆரவாரமும் கேட்டது.

ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்த போது, எதிரே இருந்த 'நடராஜா' தியேட்டரைச் சுற்றி நூற்றுக்கணக்கான இளைஞர்கள் திரண்டிருந்தனர். சுமார் 50 அடிக்கும் மேல் உயரமான ஒரு பிரம்மாண்ட கட்அவுட் தயாராகிக் கொண்டிருந்தது. சினிமா, கட்அவுட், ரசிகர்கள் என்றாலே குஷியாகிவிடும் எனக்கு, அங்கு என்ன நடக்கிறது என்று பார்ப்பதில் மிகுந்த ஆர்வம் தொற்றிக்கொண்டது.

கருப்பு நிற கோட், கருப்பு ஷூ அணிந்த ஒரு நாயகனின் உடல் பாகம் மெல்ல மெல்ல உயர்ந்து கொண்டிருந்தது. தலைப் பகுதி மட்டும் இன்னும் பொருத்தப்படவில்லை. மிகுந்த ஆவலோடு காத்திருந்தேன். அந்த கட் அவுட்டின் தலைப் பகுதி பொருத்தப் பட்ட உடனே தெரிந்தது, அது நம் 'தல' அஜித்குமாரின் கட்அவுட் என்று! "அல்டிமேட் ஸ்டார் அஜித்குமார் நடிக்கும் 'சிட்டிசன்' இன்று முதல்" என்ற பிரம்மாண்ட போஸ்டர் ஒட்டப்பட்டது. மகிழ்ச்சியில் துள்ளிய நான், எப்படியாவது இந்தப் படத்திற்கு அழைத்துச் செல்லுமாறு தந்தையிடம் அடம் பிடித்தேன்.

பெங்களூருவில் ஒரு தமிழ் கொண்டாட்டம்

அப்பாவும் என்னை காலை 10:30 மணி காட்சிக்கு அழைத்துச் சென்றார். கர்நாடகாவின் தலைநகரான பெங்களூரில், மல்லேஸ்வரம் போன்ற ஒரு முக்கியப் பகுதியில், ஒரு தமிழ்ப் படத்திற்கு மேளதாளங்களுடன் கூடிய அந்த ஆரவாரமான வரவேற்பை இப்போதும் நினைத்தால் சிலிர்க்கிறது. விசில் சத்தங்களுக்கும் கைதட்டல் களுக்கும் இடையே தியேட்டருக்குள் நுழைந்தேன்.

அன்று வரை 'காதல் மன்னனாக' மட்டுமே பார்த்து வந்த அஜித்குமாரை, ஒரு மாஸ் ஹீரோவாக, அதுவும் பலவிதமான கெட்டப்புகளில் ஒரு பிரம்மாண்ட ஆங்கிலத்திரைப்படத்திற்கு நிகரான காட்சிகளில் பார்த்தது ஆச்சரியமாக இருந்தது. ஒவ்வொரு காட்சியும் ரசிகர்களின் ஆரவாரத்தோடு விறுவிறுப்பாக நகர்ந்தது. படம் முடிந்ததும் திரையில் 'இயக்கம்: ஷரவண சுப்பையா' என்ற பெயரைப் பார்த்தேன். சினிமா ரத்தம் ஓடிக்கொண்டிருந்த அந்தச் சிறுவயதில், அந்தப் பெயர் மனதில் ஆழமாகப் பதிந்தது.





மீண்டும் மீண்டும் ஒரு பிரமிப்பு

சமூக வலைதளங்களோ, நவீன தொழில்நுட்பங்களோ இல்லாத அந்த காலக்கட்டத்தில், ஊர் முழுவதும் 'ஐலைக் யூ' பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. அஜித்தின் திரைப் பயணத்தில் இப்படி ஒரு பிரம்மாண்டத்தை நிகழ்த்திய ஷரவண சுப்பையாவின் திறமை வியக்க வைத்தது. அந்த விறுவிறுப்பு குறையாமல், அடுத்த இரண்டு வாரத்திற்குள் பழனியில் குடும்பத்துடன் சென்றிருந்தபோது 'வள்ளுவர்' தியேட்டரிலும் அதே போன்ற கட் அவுட்டைப் பார்த்ததும் மீண்டும் ஒருமுறை பார்த்து ரசித்தேன்.

இத்தனை ஆண்டுகள் கழிந்தும், தொலைக்காட்சியில் அந்தப் படம் ஓடினால் இப்போதும் சில நிமிடங்கள் நின்று ரசிப்பதுண்டு. *"இந்திய வரைபடத்தில் ஒரு ஊரையே காணோம்", "இது கதை அல்ல, ஒரு கருப்பு சரித்திரம்"* போன்ற எழுத்தாளர் பாலகுமாரனின் கூர்மையான வசனங்கள் அந்தப் படைப்பிற்கு உயிர் கொடுத்தன. ரவி கே. சந்திரனின் ஒளிப்பதிவு ஒரு ஹாலிவுட் பட உணர்வைத் தந்தது. தேவாவின் இசையில் 'பூக்கார', 'கிழக்கே உதித்த சூரியன்' போன்ற பாடல்கள் இன்றும் நம் செவிகளில் ரீங்காரமிடுகின்றன.

சிட்டிசன் ஏற்படுத்திய தாக்கம்

'சிட்டிசன்' வெளியான பிறகு வந்த ரமணா, சாமுராய் போன்ற படங்கள் கூட இதன் சாயலில் இருப்பதாகப் பேசப்பட்டது. அஜித்தின் திரை வாழ்க்கையை 'சிட்டிசனுக்கு முன், சிட்டிசனுக்கு பின்' என்று பிரித்துப் பார்க்கும் அளவிற்கு இது ஒரு மைல்கல். இந்தப் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, இயக்குநர் ஷரவண சுப்பையாவிற்கு அஜித் ஒரு காரைப் பரிசாக வழங்கியது இன்றும் நினைவில்

இருக்கிறது.

சிட்டிசன் வெளியாகி 25வது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. ஒரு அறிமுக இயக்குநர், தனது முதல் படத்திலேயே ஒரு மாபெரும் நட்சத்திரத்தையும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களையும் கையாண்டு, ஒரு சமூகப் பிரச்சினையைப் பிரம்மாண்டமாகப் பேசியது சாதாரண விஷயமல்ல. இக்காலக்கட்டத்தில் இதுபோன்ற ஒரு அறிமுகம் கிடைப்பது மிகவும் அரிது. அதேபோன்று அந்த திரைப்படத்தில் இறுதிக்காட்சியில் குற்றவாளிக்கு அளிக்கும் தண்டனை இந்திய சினிமா வரலாற்றில் ஒரு புதுவிதமான முயற்சியாக இருந்தாலும், இன்றும் சமுதாயத்தில் சில அக்கிரமங்களும், பிரச்சனைகளும் அரங்கேறும் போது அந்த சமூக விரோதிகளுக்கு சிட்டிசன் திரைப்படத்தில் கொடுக்கும் தண்டனையை போன்று ஒரு தண்டனையை இந்திய சட்டமைப்பு கொடுக்கக் கூடாதா? என்று ஒவ்வொரு சாமானிய மக்களும் மனதில் நினைப்பது தான் சிட்டிசன் திரைப்படத்தின் உண்மையான வெற்றி..

அன்று ஒரு சினிமா ரசிகனாகப் பார்த்து வியந்த நான், இன்று திரைத்துறையில் பணிபுரிபவனாக அந்தப் படத்தைப் பார்த்து இன்னும் வியக்கிறேன். நான் கதை, திரைக்கதை, வசனம் எழுதிய 'சாமானியன்' திரைப்படத்தில் ஷரவண சுப்பையா அவர்கள் நடித்தே தீர வேண்டும் என்று



முடிவு செய்தேன். அவருக்காகவே ஒரு மாஸான கதாபாத்திரத்தை வடிவமைத்தேன். ஒரு சில காட்சிகள் என்றாலும், அவர் நடித்தது எனக்குப் பெருமை. அப்போது ஷரவண சுப்பையா அண்ணனிடம் நெருங்கி பழகும் வாய்ப்பும் கிடைத்தது. இந்த தகவல்களை அவரிடமே பிரமிப்பாக கூறினேன். அப்போதுதான் சிட்டிசன் திரைப்படத்தைப் பற்றிய சில அரிதான தகவல்களையும் பகிர்ந்தார் அது ஆச்சரியமாக இருந்தது. சிட்டிசன் திரைப்படத்தில் சுப்பிரமணி என்ற தந்தை அஜித் வேடத்தில் முதலில் நடிக்க இருந்தது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தான் என்றும் ஒரு சில காரணங்களால் அது நடக்காத போது தான் அந்த கதாபாத்திரத்தை அஜித்குமாரை ஏற்று நடித்தார் என்றும் ஆச்சரியமான ஒரு விஷயத்தை கூறினார்.

அதேபோன்று, ஒரு காட்சியில் நூற்றுக்கணக்கான நடிகர் நடிகைகளை நிர்வாணமாக படத்தின் அழுத்தமான ஒரு காட்சிக்காக பதிவு செய்திருந்தார் ஆனால் ஒரு சில காரணங்களால் அந்த காட்சி திரைப்படத்தில் இடம் பெறவில்லை என்றும் வருத்தம் தெரிவித்தார்..

அந்த திரைப்படத்தைப் பற்றி அண்ணன் ஷரவண சுப்பையா அவர்கள் கூறும் போது நிச்சயமாக இன்னும் பத்து சிட்டிசன் போன்ற திரைப்படங்கள் எடுப்பதற்கான வெறியும் துணிச்சலும் அவரிடம் இருந்தது புரிந்து கொண்டேன் சிட்டிசன் 2 எதிர்பார்க்கலாமா என்று அவரிடம் கேட்டேன்,

அதற்கு அவர் அவரது ஸ்டைலில் ஒரு புன்னகை பூத்தார் ஒருவேளை அது போன்று ஒரு நிகழ்வு நடந்தால் சிட்டிசன் திரைப்படத்தின் பல கோடி ரசிகர்களைப் போன்று நானும் மீண்டும் ஒரு வரலாற்று சரித்திரத்தை கொண்டாடுவதற்கு தயாராக இருக்கிறேன்.

நான் ஒரு எழுத்தாளனாக மாறியிருப்பதற்கும், சினிமா என் வாழ்வாதாரமாக அமைந்ததற்கும் 'சிட்டிசன்' போன்ற படங்கள் ஒரு முக்கியக் காரணம். இன்னும் 50 அல்லது 100 ஆண்டுகள் ஆனாலும், 'சிட்டிசன்' தமிழ் திரையுலகின் ஒரு சரித்திரமாகத் தலைநிமிர்ந்து நிற்கும்.

எழுத்தாளர், இயக்குநர்

V.கார்த்திகுமார்



களிறு நடை அகநி வெளியீட்டின் 25ஆவது வெள்ளி விழா





அகநி வெளியீட்டின் 25ஆவது வெள்ளி விழா ஆண்டில் வெளியான சிறப்பு நூல் கவிஞர் என். குமார் எழுதிய 'களிறு நடை' கவிதைத் தொகுப்பு. மே மாதம் முதல் தேதி, 'இடம்' என்னும் இடத்தில், ஒரு பௌர்ணமி மாலையில் நிகழ்ச்சி இனிதே நடைபெற்றது.

விழா அரங்கத்தில் நுழைந்த மாத்திரத்தில், அடர்ந்த வனத்தில் நிற்பது போன்ற உணர்வு. காற்று, ஓடை, பறவைகளின் ஒலி கேட்கும்படியான மெல்லிய இசை அரங்கம் முழுவதும் ஒலித்தது. 'களிறு நடை' வெளியீட்டு விழாவிற்கு இதைவிட பொருத்தமான சூழல் வேறெதுவாக இருக்க முடியும்?

துவக்கவுரை

பதிப்பாளரும் கவிஞருமான மு. முருகேஷ் அவர்களின் கலகலப்பான துவக்கவுரையோடு விழா தொடங்கியது. தமது வழக்கமான நகைச்சுவையும் ஆழமான இலக்கிய நோக்கும் கலந்த தொகுப்புரையும் அன்றைய விழாவின் தனி ஹைலைட்டாக அமைந்தது. விழாத் துவக்கத்தில் தேசிய விருது பெற்ற கலைஞர் சுந்தரய்யர் பாடிய பாடல் அரங்கை உணர்வுகளால் நிரப்பியது.

சிறப்பு விருந்தினர்கள்

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக இலக்கிய, திரை, கலை உலகின் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு தமது கருத்துகளை பகிர்ந்தனர்:

இயக்குநர் இராதாகிருஷ்ணன் பார்த்திபன் திருமதி. ஷோபா சந்திரசேகர்

கவிஞர், இசைஞர் இசைக்கவி ரமணன்எழுத்தாளர் அமிர்தம் சூர்யா கவிஞர் முனைவர் இரா. மஞ்சுளா கவிஞர், பாடலாசிரியர் பித்தன் வெங்கட்ராஜ்

இந்த விழாவில் கவிஞரும் இயக்குநருமான வஸந்த் தமது கவிதையான குரலில் வாழ்த்துரை அனுப்பி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தார். தைவான் நாட்டிலிருந்து எழுத்தாளர், முது முனைவர் சு. தங்கலீலா சிறப்பு வாழ்த்துரை அனுப்பி நூல் விமர்சனத்தில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

கோவிலின்
உள்ளே இருப்பது
நானென்று தெரியாமல்
வெளியே காத்திருந்தேன்

நூல் வெளியீடு

இயக்குநர் இராதாகிருஷ்ணன் பார்த்திபன் 'களிறு நடை' நூலை வெளியிட, முதல் பிரதியை திருமதி. ஷோபாசந்திரசேகர் பெற்றுக்கொண்டார். பின்னர் சிறப்புப் பிரதிகளை பின்வரும் சான்றோர்கள் பெற்றுக்கொண்டனர்:

நிரஞ்சன் பாரதி | பாக்கியம் சங்கர் | பார்வதி மீரா | தஞ்சை தவசி | ரம்யா வாசுதேவன் | ஆர். சுப்பிரமணிய பாரதி | தி. குலசேகர் | லார்க் பாஸ்கரன் | ம. மகாலிங்கம் மற்றும் பலர்.

விழாவின் இசை நடை

விழாவின் நடுவில், கவிஞரும் இசைஞருமான இசைக்கவி ரமணன் தமது பேச்சுக்கிடையே ஒரு தத்துவப் பாடல் பாடி அனைவரையும் மயக்கினார். அன்றைய விழாவின் இசை நடை, கவிதையும் இசையும் ஒன்றென்பதை உணர்த்தியது.

எழுத்தை மதிக்கும் புதிய காட்சி

அகநி வெளியீடு சார்பாக வந்திருந்த வாசகர்களின் எழுத்து ஆர்வத்தை ஊக்கப்படுத்தும் வகையில், பத்திரிகையாளர் ரங்கா அவர்களிடம் இயக்குநர் இராதாகிருஷ்ணன் பார்த்திபன் நோட்டு பேனா நிரம்பிய ஒரு தட்டை வழங்கினார். அந்தத் தட்டு அரங்கில் இருந்த ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டது. எழுத்தை மதிக்கும் இந்தப் புதிய காட்சி அனைவரையும் உள்ளம் கொள்ளாத ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

விழாவின் 'பொயட்டிக் டச்'

விழா நிறைவடையும் தருணத்தில் நிகழ்ந்தது அன்றைய விழாவின் மிகப் பெரிய திருப்பம். அரங்கில் விற்பனைக்கு வைத்திருந்த மொத்தப் புத்தகங்களையும் தான் வாங்கிச் செல்வதாக இயக்குநர் இராதாகிருஷ்ணன் பார்த்திபன் சொல்லி கைகளில் அள்ளிக்கொண்டார்.

"கைவசம் இருக்கும் பிரதிகள் அவ்வளவுதான் சார் அதுவும் அரங்க விற்பனைக்கு..." என்று பதிப்பாளர் மு. முருகேஷ் (சிரித்தபடி) சொல்ல,

இந்தப் பதிலை கேட்ட மாத்திரத்தில், இயக்குநர் இராதாகிருஷ்ணன் பார்த்திபன் தம் கைகளிலிருந்த அத்தனை புத்தகங்களையும் அரங்கத்தில் அமர்ந்திருந்த வாசகர்கள் ஒவ்வொருவருக்கும் நேரில் சென்று பரிசாக வழங்கினார். 'களிறு நடை' விழாவின் இந்த 'பொயட்டிக் டச்' நீண்ட காலம் மனதில் நிலைக்கும்.



கவிஞரின் ஏற்புரை

கவிஞர் என். குமார் தமது ஏற்புரையில் பேசிய விஷயங்கள் 'களிறு நடை'யின் இரண்டாவது தொகுப்பை படித்த ஈர்ப்பினை அனைவருக்கும் தந்தன. வந்திருந்தோருக்கு இனிப்பும் காரமும் காஃபியும் மட்டுமல்ல, செவிகளுக்கு மிக மிக இரசனையான, நகைச்சுவையான, அர்த்தமுள்ள நூலுரைகளும் கிடைத்தன. அரங்கமும் படைப்பாளிகளும் பிரபலங்களும் நிறைந்திருந்த அன்றைய பௌர்ணமி மாலை, தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு சிறப்பான அத்தியாயமாக நிலைத்துவிட்டது.

இத்தகைய சிறப்பான கவிதைகளை உள்ளடக்கிய 'களிறு நடை' தமிழ் கவிதை உலகில் தனியிடம் பெறும் என்பதில் ஐயமில்லை. கவிஞர் என். குமாரின் இந்த கவிதைத் தொகுப்பு அகநி வெளியீட்டின் 25ஆவது ஆண்டிற்கு தகுந்த பரிசாக அமைந்துள்ளது.

> முதல் பக்க தொடர்ச்சி...

தமிழ் திரையுலகம் (கோலிவுட்)

- சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்: "விஜய்க்கும் எனக்கும் 25 வருட தலைமுறை இடைவெளி உள்ளது; எனக்கு எந்த அரசியல் பொறாமையும் இல்லை" என்று தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தது, கலையுலகின் தலைமுறைகளைத் தாண்டிய மகத்தான பண்பாட்டைக் காட்டுகிறது.
- கமல்ஹாசன்: மூத்த நடிகரும் அரசியல்வாதியுமான கமல்ஹாசன், விஜய்யை நேரில் சந்தித்து வாழ்த்தியவர்களில் முதன்மையானவர். அவர் தனது பெருமிதத்தைப் பகிர்ந்து, "தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள எனது தம்பி திரு. விஜய் அவர்களின் தலைமையில் தமிழகம் சிறந்து விளங்கட்டும். நமது திரையுலகில் இருந்து விஜய் இந்த அரியணை உயரத்தை எட்டியிருப்பது ஒட்டுமொத்த சினிமாத் துறைக்கே பெருமை" என்று கூறினார். மேலும், கல்வி நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் உள்ள 717 டாஸ்மாக் மதுபானக் கடைகளை மூடும் விஜய்யின் முதல் நிர்வாக உத்தரவுக்கும் அவர் தனது பாராட்டுக்களையும் ஆதரவையும் தெரிவித்துள்ளார்.

"என் சகோதரா, இது சாத்தியமில்லை என்று சொன்னார்கள், இது வெறும் 'ரசிகர்களின் வெறி' என்று சொன்னார்கள். ஆனால் இப்போது உன்னைப் பார். 'என்ன நண்பா, சொல்லி அடிச்சோம்ல!' வெள்ளித்திரையின் அந்த ஆற்றலை நிஜ உலகப் புரட்சியாக மாற்றிக் காட்டியிருக்கிறாய். மக்களின் முழக்கம் உண்மையானது, இந்த வெற்றி வரலாற்றுச் சிறப்புமிக்கது, இனி எதிர்காலம் உன்னுடையதே."

- சிம்ரன்: விஜய்யை மக்கள் தலைவர் என்று குறிப்பிட்டு ஒரு நெகிழ்ச்சியான பதிவைப் பகிர்ந்துள்ளார்: "எனது அன்பான நண்பரும், உண்மையான ஜன நாயகனுமான திரு. விஜய் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த வாழ்த்துகள். இன்றைய நாள் வெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் மட்டுமல்ல, ஒரு சக்திவாய்ந்த புதிய யுகத்தின் தொடக்கம்."
- ஆர். மாதவன்: விஜய்யின் புகைப்படத்தைப் பகிர்ந்து, "இறைவன் உங்களை ஆசீர்வதிக் கட்டும், உங்களை நினைத்து மிகவும் பெருமைப்படுகிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.
- பிரபுதேவா: "வொண்டர்மேன்! முதலமைச்சருக்கு மனமார்ந்த வாழ்த்துகள்!" என்று சுருக்கமாகவும் உற்சாகமாகவும் வாழ்த்தியுள்ளார்.
- திரிஷா கிருஷ்ணன் மற்றும் ஏ.ஆர். ரஹ்மான்: இருவரும் விஜய் பதவியேற்ற உடனே தங்களது மகிழ்ச்சியையும் மனமார்ந்த வாழ்த்துகளையும் சமூக வலைதளங்கள் வாயிலாகப் பகிர்ந்துள்ளனர்.
- ரா. பார்த்திபன்: புதிய முதலமைச்சரை மதிப்பதிலும் வாழ்த்துவதிலும் தாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்துள்ளார்.

தெலுங்கு திரையுலகம் (டோலிவுட்)

- மெகாஸ்டார் சிரஞ்சீவி: "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்குக் கிடைத்ததைப் போன்ற மக்களின் நிரந்தர அன்பை நீங்கள் பெற வேண்டும்" என்று வாழ்த்தியுள்ளார்.
- பவன் கல்யாண்: சக நடிகரும் அரசியல்வாதியுமான பவன் கல்யாண் தனது அதிகாரப்பூர்வ வாழ்த்தில், "தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள தவெக தலைவர் திரு. விஜய் அவர்களுக்கும், அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ள மற்ற அனைவருக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகள்" என்று பதிவிட்டுள்ளார்.
- விஜய் தேவரகொண்டா: தமிழ் அரசியலில் ஏற்பட்டுள்ள இந்த மிகப்பெரிய மாற்றத்தை வரவேற்று, "புதிய தொடக்கம் விஜய் காரு! தமிழ் அரசியலில் இந்த புதிய கட்டத்தையும் புதிய முகத்தையும் காண நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்" என்று கூறியுள்ளார்.
- நானி: விஜய்யின் இந்த அரியணை நோக்கிய பயணத்தை "அப்சல்யூட் சினிமா" (Absolute Cinema) என்று சுருக்கமாகக் கொண்டாடியுள்ளார்.
- மோகன் பாபு: திரையுலகினரின் பெருமிதத்தைக் குறிப்பிட்டு, "நடிப்புத் துறையைச் சேர்ந்த ஒருவர் தமிழகம் போன்ற ஒரு சிறந்த மாநிலத்தை வழிநடத்த உயர்ந்து திருப்பது ஒட்டுமொத்த இந்தியத் திரையுலகிற்கும் பெருமையான தருணம்" என்று வாழ்த்தியுள்ளார்.
- ராஷ்மிகா மந்தனா மற்றும் ராம் போத்தினேனி: தேர்தல் முடிவுகள் வெளியானது முதலே விஜய்க்குத் தங்களது அசைக்க முடியாத ஆதரவையும் வாழ்த்துகளையும் தெரிவித்து வருகின்றனர்.

பாலிவுட் மற்றும் சாண்டல்வுட் (கன்னடம்) பிரபலங்கள்

- விவேக் ஓபராய்: மிகவும் உணர்ச்சிப்பூர்வமான ஒரு பதிவை எழுதியுள்ளார்: "என் சகோதரா, இது சாத்தியமில்லை என்று சொன்னார்கள், இது வெறும் 'ரசிகர்களின் வெறி' என்று சொன்னார்கள். ஆனால் இப்போது உன்னைப் பார். 'என்ன நண்பா, சொல்லி அடிச்சோம்ல!' வெள்ளித்திரையின் அந்த ஆற்றலை நிஜ உலகப் புரட்சியாக மாற்றிக் காட்டியிருக்கிறாய். மக்களின் முழக்கம் உண்மையானது, இந்த வெற்றி வரலாற்றுச் சிறப்புமிக்கது, இனி எதிர்காலம் உன்னுடையதே."
- டைகர் ஷெராஃப்: தவெக தலைவருக்கு வாழ்த்து தெரிவித்ததோடு, மக்கள் அவர் மீது வைத்துள்ள அபார நம்பிக்கையைப் பாராட்டியுள்ளார்.
- சத்ருகன் சின்கா: விஜய் இந்த பதவிக்கு "முற்றிலும் தகுதியானவர்" என்று குறிப்பிட்டு, அவரது ஆட்சிக்காலம் சிறக்க வாழ்த்தி யுள்ளார்.
- கிச்சா சுதீப் மற்றும் சிவ ராஜ்குமார்: விஜய்யை ஒரு தொலைநோக்கு



"நடிப்புத் துறையைச் சேர்ந்த ஒருவர் தமிழகம் போன்ற ஒரு சிறந்த மாநிலத்தை வழிநடத்த உயர்ந்து திருப்பது ஒட்டுமொத்த இந்தியத் திரையுலகிற்கும் பெருமையான தருணம்"

பார்வை கொண்ட தலைவராகப் பாராட்டி, கன்னடத் திரையுலகின் சார்பில் தங்களது முழு ஆதரவையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

திரையுலகச் சங்கங்களின் அதிகாரப்பூர்வ வாழ்த்துரைகள்

தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் (TFPC) தலைவர் ஜி.கே.எம். தமிழ்குமரன், செயலாளர்கள் கதிரேசன் எஸ். மற்றும் ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோர் கூறுகிறார்கள்: "தளபதி விஜய் சினிமாவில் வெற்றிக் கொடி கட்டியது போல, தமிழக அரசியலிலும் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பாதையில் திரைத்துறையிலிருந்து முதலமைச்சராக உயர்ந்துள்ள இந்தப் புதிய அரசுக்கு வாழ்த்துகள். அவரது ஊழலற்ற நிர்வாகத்தில் சினிமா வர்த்தகம் புதிய பொற்காலத்தை எட்டும் என்று நம்புகிறோம்."

தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனம் (FEFSI) தலைவர் ஆர்.கே. செல்வமணி, பொதுச் செயலாளர் பி.என். சுவாமிநாதன், பொருளாளர் எஸ்.பி. சென்தில்குமார் ஆகியோர் கூறுகிறார்கள்: "திரைத்துறையிலிருந்து ஒரு புள்ளியாகத் தொடங்கி, புயலாக மாறி, இன்று தமிழர்களின் இதயங்களில் நிலையாக நிற்கும் சகோதரர் விஜய் — நீங்கள் உறுதியளித்தபடி நல்லாட்சி புரிந்து, தமிழ் மக்கள் மனங்களில் நீண்ட நாள் வாழ வேண்டும்."

தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் (TANTIS) தலைவர் ஆர்.கே. செல்வமணி, பொதுச் செயலாளர் ஆர்.வி. உதயகுமார், பொருளாளர் ம. பேரரசு ஆகியோர் கூறுகிறார்கள்: "புதிய முதலமைச்சராக பதவியேற்றிருக்கும் மாண்புமிகு திரு. சி. ஜோசப் விஜய் அவர்களுக்கு உளமார்ந்த வாழ்த்துகள். முதல்வர் நம் கலைக்குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பது எங்களுக்கு பெரும் பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கிறது."

வெள்ளித்திரையில் 'தளபதி'யாக லட்சக்கணக்கான இதயங்களை வென்றவர், இப்போது ஜனநாயகத்தின் வழியாக இந்த மாநிலத்தின் வழிகாட்டியாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். கலை, உழைப்பு மற்றும் மாநில நிர்வாகம் ஒன்றிணையும் இந்த இணையற்ற வரலாற்றுத் தருணத்தை பெருமிதத்துடன் ஆவணப்படுத்துகிறது திரைமொழி இதழ் முதலமைச்சர் திரு. சி. ஜோசப் விஜய் அவர்களுக்கும் அவரது அமைச்சரவைக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கு சிறப்பான சேவையாற்ற எங்களது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம்.

THIRAI MOZHI TAMIL MONTHLY PRESS REGISTRAR GENERAL OF INDIA
PRGI (RNI) No: TNTAM/2023/88599 Published on 2nd WEEK OF EVERY MONTH
May - 2026



திரையுலகத் தொழிலாளர்களின் 'மே தின'ப் பெருவிழா 2026

தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம் (FEFSI) என்பது வெறுமனே 23 சங்கங்களின் கூட்டமைப்பு மட்டுமல்ல; அது கோலிவுட்டின் பிரம்மாண்டத் திரைக்குப் பின்னால் இரவு பகலாக உழைக்கும் சுமார் 25,000 தொழிலாளர்களின் வாழ்வாதாரக் கோட்டை. 1967 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது முதல், தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் குரல் கொடுத்து வரும் 'பெப்சி' (FEFSI), இந்த ஆண்டும் வழக்கம் போல உழைப்பாளர் தினத்தை மிக விமரிசையாகக் கொண்டாடியுள்ளது.

மே 1, 2026 (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணியளவில் சென்னை வடபழனியில் உள்ள இசைக்கலைஞர்கள் சங்க வளாகத்தில் (கமலா திரையரங்கம் அருகில்) இந்த 'தொழிலாளர் மே தின விழா 2026' மிகக் கோலாகலமாகத் தொடங்கியது.

இந்த விழாவிற்கு பெப்சி பொதுச் செயலாளர் திரு. B.N. சுவாமிநாதன் அவர்கள் தலைமை தாங்கி, வந்திருந்த திரையுலகப் பிரபலங்களையும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களையும் நெகிழ்ச்சியோடு வரவேற்றார்.

அமெரிக்காவிலிருந்து தலைவர் ஆர்.கே. செல்வமணி விழாவிற்குத் தனது பிரத்யேக 'மே தின' வீடியோ வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, சம்மேளனத்தின் சார்பில் திரையுலகிற்கு ஆற்றிய நீண்டகாலப் பங்களிப்பிற்காக பெப்சி அமைப்பின் துணைத்தலைவர் திரு. M.N. மாரி அவர்களுக்குப் பாராட்டுக்களும் கௌரவமும் வழங்கப்பட்டது.

அடுத்ததாக, பெப்சி அமைப்பின் முன்னாள் தலைவரான திரு. V.C. குகநாதன் அவர்கள் பேசுகையில், திரைப்படத் தொழிலாளர்களின் கடந்தகால வரலாற்றுப் போராட்டங்கள், அவர்கள் ரத்தம் சிந்திப் பெற்ற உரிமைகள் மற்றும் தற்கால டிஜிட்டல் சூழலில் தொழிலாளர்கள் எதிர் கொள்ளும் வாழ்வாதார சவால்கள் குறித்து மிக விரிவாகப் பேசினார்.



திரைப்படத் தொழிலாளர்களுக்கும் தயாரிப்பாளர்களுக்கும் உள்ள இணக்கமான உறவை வெளிப்படுத்தும் விதமாக, தமிழ்த்திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் முக்கியப் பொறுப்பாளர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

தமிழ்த்திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கப் பொதுச்செயலாளர் திரு. S.கதிரேசன், துணைத்தலைவர் திரு. கமலக்கண்ணன் ஆகியோர் தொழிலாளர்களின் உழைப்பைப் பாராட்டிப் பேசினர்.

தமிழ்த்திரைப்பட நடப்புத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் திரு. T.G. தியாகராஜன் மற்றும் பொதுச் செயலாளர் திரு. T. சிவா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

அவர்கள் பேசுகையில், தமிழ் சினிமாவின் உலகளாவிய பிரம்மாண்ட வெற்றிக்குத் திரைக்குப் பின்னால் இருக்கும் தொழிலாளர்களின் வியர்வை தான் அஸ்திவாரம் என்றும், தொழிலாளர்களின் இபிஎஃப் (EPF) மற்றும் இஎஸ்ஐ (ESI) போன்ற சமூகப் பாதுகாப்பு நலன்களுக்குத் தயாரிப்பாளர்கள் சங்கம் என்றும் அரணாகத் துணை நிற்கும் என்றும் உறுதியளித்தனர்.

தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்க பொதுச் செயலாளர் இயக்குநர் ஆர்.வி.உதயகுமார், பொருளாளர் இயக்குநர் பேரரசு ஆகியோரும் மே தின விழாவில் வாழ்த்தி பேசினார்கள்.

விழாவின் இறுதியாக, பெப்சி அமைப்பின் பொருளாளர் திரு. S.P. செந்தில் குமார் நன்றியுரை ஆற்றினார். தேநீர் விருந்து மற்றும் தேசிய கீதத்துடன் இந்த ஆண்டின் மே தின விழா இனிதே நிறைவுற்றது.

சம்மேளனத் துணைத்தலைவர்கள் (திரு. தினா, திரு. அசோக் மேத்தா, திரு. மோகனமகேந்திரன், திரு. அசோக்குமார்) மற்றும் இணைச்செயலாளர்கள் (திரு. G. ராமலிங்கம், திரு. A. புருஷோத்தமன், திருமதி A. ஷாஜிதா, திரு. J. சம்பத்குமார், திரு. A. பாலாஜி) உட்பட அனைத்துச் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாகக் கலந்துகொண்டு இவ்விழாவினைச் சிறப்பித்தனர்.

திரை மொழி THIRAI MOZHI
PRGI (RNI) No: TNTAM/2023/88599
TAMIL MONTHLY

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
துணை ஆசிரியர் : சிவயோகி மவுரியன்
கௌரவ ஆசிரியர்கள் : குரு அரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்
நிருபர் : தங்கமித்ரன்

தொடர்புக்கு :
Website: Thiraimozhi.com
Email : info@thiraimozhi.com
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766

Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**